பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 08 2024 **TUESDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. யுக்ரைன் நிலவரம் உட்பட சர்வதேச விவகாரங்கள் குறித்து அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடனும், பிரதமர் திரு. நரேந்திர மோடியும் விவாதித்தனர்.

2. ஆழ்கடல் உடன்படிக்கை தொடர்பாக, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் சென்னையில் இன்று கூடி ஆலோசனை நடத்துகின்றனர்.

3. தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

4. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, ராமேஸ்வரத்தை சேர்ந்த எட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

5. அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல், நெதர்லாந்தின் **Tallon Grieks Poor** –ஐ எதிர்கொண்டுள்ளார்.

**>>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடியை அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

மண்டல மற்றும் யுக்ரைன் நிலவரம் உட்பட சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக இருவரும் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்திய – அமெரிக்க விரிவான சர்வதேச உக்திசார் ஒத்துழைப்பு உடன்பாட்டிற்கு திரு. பைடன் ஆற்றிய பங்களிப்பிற்கு பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இருநாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தவும், ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், உலகில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தவும் திரு. ஜோ பைடன் ஆற்றி வரும் பங்களிப்பையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டினார்.

இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்த இரு தலைவர்களும், இந்தியா – அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்பால் இரு நாடுகளின் மக்கள் மட்டுமல்லாது, ஒட்டுமொத்த மனிதகுலமும் பயனடையும் என்று கூறினர்.

யுக்ரைன் உட்பட பல்வேறு விஷயங்கள் தொடர்பாக திரு. ஜோ பைடனும், திரு. நரேந்திர மோடியும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

சமீபத்தில் யுக்ரைனுக்கு தாம் மேற்கொண்ட பயணம் தொடர்பாக திரு. நரேந்திர மோடி அமெரிக்க அதிபருடன் சில கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியிலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாக கூறிய பிரதமர், யுக்ரைனில் விரைவாக அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்பட இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றார்.

பங்களாதேஷில் தற்போதுள்ள நிலைமை குறித்து இரு தலைவர்களும் தங்களது கவலையை பகிர்ந்து கொண்டனர்.

அந்நாட்டில் சட்டம் ஒழுங்கை மீட்டு எடுப்பதோடு, சிறுபான்மை மக்களின் குறிப்பாக, இந்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று இரு தலைவர்களும் கேட்டுக் கொண்டனர்.

க்வாட் உட்பட சர்வதேச அமைப்புகளில் இருதரப்பு ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்கவும் இரு தலைவர்களும், இந்த சந்திப்பின் போது உறுதியேற்றுக் கொண்டனார்.

>>>>><<<<

ஆழ்கடல் உடன்படிக்கை தொடர்பாக, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் சென்னையில் இன்று கூடி ஆலோசனை நடத்துகின்றனர்.

நாடுகளின் எல்லைகளுக்கு அப்பால் உயிரி பன்முகத்தன்மையை அமல்படுத்துவது என்ற ஐ.நா சபையின் முடிவை அமலாக்குவது தொடர்பாகவும் இரண்டு நாள் கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளது.

ஆழ்கடல் பகுதியில் கேபிள்களை பதிப்பது உட்பட சட்டபூர்வ நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வது தொடர்பாகவும் இதில் ஆலோசிக்கப்படவுள்ளது.

பருவநிலை மாற்றத்தால் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உருவாகியுள்ள சவால்களை எதிர்கொள்வது தொடர்பாகவும் இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்த கருத்தரங்கில் இந்தியா, பங்களாதேஷ், மாலத்தீவு, நேபாளம், கம்போடியா, தாய்லாந்து, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளின் அரசு அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

>>>>><<<<

தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

சென்னையில் கடந்த ஜனவரி மாதம், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தமிழக அரசு நடத்தியது.

அதில் 9 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இதன் தொடர்ச்சியாக உலக நாடுகளின் முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து, சர்வதேச அளவில் தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை கொண்டு வரும் வகையில், முதலமைச்சர் அமெரிக்க பயணத்தை மேற்கொள்கிறார்.

சென்னையிலிருந்து இன்று புறப்படும் முதலமைச்சர், அமெரிக்காவில் 17 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

சான்பிரான்சிஸ்கோவில் உள்ள உலகின் முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளை முதலமைச்சர் சந்தித்து பேசவுள்ளார்.

அங்கு நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் முதலமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இம்மாதம் 31ஆம் தேதி புலம் பெயர்ந்த தமிழர்களை சந்தித்து பேசவுள்ள அவர் செப்டம்பர் 2ஆம் தேதி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சிகாகோ சென்று அங்கு பல்வேறு முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்தில் தொழில் தொடங்க அழைப்பு விடுக்கவுள்ளார்.

>>>>><<<<

தமிழகத்தில் மீனவர்கள் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துள்ளதாக சட்ட அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்.

நாகையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களை, மத்திய அரசு மூலமாக மாநில அரசு மீட்டு வருவதாக கூறினார்.

மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை, கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது என்றும், பல்வேறு வகைகளில் மீனவர்களுக்கு மாநில அரசு உதவி செய்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<

மத்திய அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமலுக்கு வரவுள்ள நிலையில், இத்திட்டத்தை மத்திய அரசு ஊழியர்கள் வரவேற்றுள்ளனர்.

2004ஆம் ஆண்டுக்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு இந்த ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று மதுரையைச் சேர்ந்த ரயில்வே ஊழியர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – ஊழியர்கள் 55 செகண்ட்ஸ்)

>>>>><<<<

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, ராமேஸ்வரத்தை சேர்ந்த எட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், மீனவர்களை அவர்களது படகுடன் மன்னார் கடற்படை முகாமிற்கு இலங்கை கடற்படையினர் அழைத்துச் சென்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<

மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் புகைப்பட கண்காட்சி கோவையில் உள்ள வ.உ.சி பூங்காவில் இன்று தொடங்குகிறது.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகம் ஏற்பாடு செய்துள்ள இந்த புகைப்பட கண்காட்சி, அடுத்த மாதம் 5ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சியை ஒட்டி, ஆதார் திருத்தம், விழிப்புணர்வு திரைப்படங்கள், கருத்தரங்கு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை பத்திரிகை அலுவலக கூடுதல் தலைமை இயக்குநர் திரு. அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலன் சார்ந்து மத்திய அரசு பல்வேறு நலத்திட்டங்களை அமல்படுத்தியுள்ள போதும், அதனை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்க்க, இதுபோன்ற கண்காட்சிகள் உதவும் என்று கூறினார்.

>>>>><<<<

பாம்பன் புதிய ரயில் பாலத்தில் மின்சார ரயில்களை இயக்க மின்கம்பங்களை பொருத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ராமேஸ்வரத்தை தமிழகத்துடன் இணைப்பதற்கு பாம்பன் ரயில் பாலம் முக்கிய பங்காற்றி வரும் நிலையில், ஏற்கனவே இருந்த பாலம் 100 ஆண்டுகளை கடந்து, உறுதி தன்மையை இழந்ததால், ரயில்வே சார்பில் 550 கோடி ரூபாய் செலவில் புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது.

இந்த பாலத்தில் கடந்த வாரம் சரக்கு ரயில் இயக்கப்பட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்றது.

மின்சாரத்தில் இயங்கும் ரயில்களை இயக்குவதற்காக தற்போது பாலத்தில் உயர் மின்அழுத்த கம்பிகளை இணைக்கும் பணியும், கம்பங்கள் நடும் பணியும் நடைபெற்று வருகின்றன.

மேலும், தண்டவாளத்தில் ரயில் செல்லும் போது ஏற்படும் அதிர்வுகளை கண்டறியும் சோதனை நேற்று நடைபெற்றது.

>>>>><<<<

வங்கக்கடலில் மேற்குவங்கம் அருகே, இரவுநேர மீட்புப் பணியில் ஈடுபட்ட கடலோர காவல்படை 11 பேரை காப்பாற்றியுள்ளனர்.

கொல்கத்தாவிலிருந்து அந்தமான் தலைநகர் போர்ட்பிளேர் நோக்கி சென்று கொண்டிருந்த சரக்கு கப்பல் ஒன்று, மேற்குவங்கத்தின் சாகர் தீவிலிருந்து தெற்கே சுமார் 90 கடல்மைல் தொலைவில் மூழ்கியதாக சென்னையில் உள்ள கடல்சார் தேடல் மற்றும் ஒருங்கிணைந்த மீட்பு மையத்திற்கு தகவல் வந்தது.

இதையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற கடலோர காவல்படையின் இரண்டு கப்பல்களும், ஒரு டோர்னியர் விமானமும் சவாலான வானிலைக்கு இடையே, நடுக்கடலில் தத்தளித்த 11 பேரை பத்திரமாக மீட்டனர்.

>>>>><<<<

ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சரும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. சம்பாய் சோரன் இம்மாதம் 30ஆம் தேதி ராஞ்சியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றில், பிஜேபியில் இணைவார் என்று அஸ்ஸாம் மாநில முதலமைச்சரும், ஜார்க்கண்ட் மாநிலத்திற்கான பிஜேபி பொறுப்பாளருமான திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

இருவரிச் செய்திகள்

இந்தியா – பிரேஸில் இடையேயான 9வது இணை ஆணையத்தின் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

>>>>><<<<

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ், முதலாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

>>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டம், இரணியல், திருவிதாங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் தேசிய ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நான்கு வழிச்சாலைப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி. அழகுமீனா நேரில் ஆய்வு செய்தார்.

>>>>><<<<

பயணிகளின் கூட்ட நெரிசலை கருத்தில் கொண்டு, மதுரையிலிருந்து – சென்னை தாம்பரத்திற்கு இன்றிரவு மணி 8.50-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>><<<<

விளையாட்டுச் செய்தி

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுமித் நாகல், நெதர்லாந்தின் **Tallon Grieks Poor** இடையிலான முதல் சுற்று ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

நியூயார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதல் செட்டை நெதர்லாந்து வீரர் 6-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளார்.

இரண்டாவது செட்டில் நெதர்லாந்து வீரர் முன்னிலையில் உள்ளார்.